[2020 ஜனவரி 9

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***56984—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, ஆற்றூர் பேரூராட்சி, தோட்டவாரம் பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2016 *முதல்* 2019 *ஆம் ஆண்டு வரையில்* 295 *ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. பத்மநாபபுரம் தொகுதி, ஆற்றூர் பேரூராட்சி, தோட்டவாரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அப்பள்ளி அரசின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததால், அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் கிராமத்தில், நான் பிறந்த ஊரில், நான் படித்த பள்ளி அங்குள்ளது. 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று திருவண்ணாமலையில் நாங்கள் 6 ஆம் வகுப்பு படித்த அந்தப் பள்ளியை, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில், எங்கள் அய்யா, ஆற்றல்மிக்க எங்கள் மாவட்டச் செயலாளர் திரு.எ.வ.வேலு அவர்கள் அதை நடுநிலைப்பள்ளியாகத் தரமுயர்த்தித் தந்தார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றது முதல், என்னுடைய கன்னிப் பேச்சிலிருந்து இன்று வரையில் தொடர்ந்து அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினரான நான் படித்த, என் பள்ளிக்கு 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்துதான் இன்னமும் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டாவது, உங்கள் பரிந்துரையோடு அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், தான் படித்த நடுநிலைப் பள்ளி என்று குறிப்பிட்டுள்ளார். உறுப்பினர் குறிப்பிடுகின்ற செங்கம் தொகுதியில் உள்ள பள்ளியைப் பொறுத்தவரையிலும் உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கு 50 மாணவர்கள் படிக்க வேண்டுமென்று அரசு நிர்ணயித்திருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட வேண்டும். குறைந்தது மூன்று ஏக்கர் நிலங்கள் தேவை. ஆகவே, அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த ஆண்டு அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

[2020 ஜனவரி 9

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை சிறப்பாக வழிநடத்துகின்ற நல்லாட்சி நாயகன்; குடிமராமத்து நாயகன்; மழை ராசி நாயகன்; மாண்புமிகு அண்ணன் முதல்வர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகன்; மனித நேய பண்பாளர் அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு இன்றைக்கு பிறந்த நாள் என்பதால், வாழும் காமராஜராக இருந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், என்னுடைய அரசியல் வழிகாட்டி, அண்ணன் திரு. கே.ஏ.எஸ். அவர்களுக்கு என்னுடைய பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–05

ஈரோடு, பெரிய வலசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் கட்டுவதற்கு முன்பு அனுமதி வழங்கப்பட்டது. இப்பொழுது நூலகம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. 'ஒரு நூலகத்தைத் திறந்தால் 10 சிறைச்சாலைகளை மூடுவதற்கு சமம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்தவகையில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு முன்பு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு பிறந்தநாள் விழாவில்தான் நூலகத்தைக் கேட்டிருந்தேன். அனுமதி கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்கள். இன்னும் அதற்கு அரசாணை வழங்கவில்லை. அரசாணை வழங்குவாரா என்று கேட்டுக்கொண்டு, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் குறிப்பிடுகிறபொழுது உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதையும் இந்த அரசு இந்த ஆண்டு பரிசீலிக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, 'நூலகத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் நிதி வழங்குகிறேன், அதற்கு அனுமதி அளிக்க வேண்டும்' என்று கேட்டார்கள். அந்த அனுமதியும் மிக விரைவிலேயே உங்களுக்கு பெற்றுத் தரப்படும். நீங்கள் அழகான முறையில் நூலகத்தைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே Indian Institute of Technology என்று சொல்லப்படும் IIT நிறுவனம் இயங்கி வருகிறது. இது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் IIT நிருவாகம் எடுத்த ஒரு நடவடிக்கை, வேளச்சேரி மக்கள் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால் அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவிக்க வேண்டியது சட்டமன்ற உறுப்பினராகிய எனது கடமை எனக் கருதுகிறேன்.

1964 ஆம் ஆண்டு IIT, Madras நிறுவனம், வேளச்சேரி காந்தி சாலையையொட்டியுள்ள பெரும்பாலான நிலங்களை விவசாயிகளிடமிருந்து வாங்கி உருவாக்கப்பட்டது. அப்போது, பகுதி மக்களின் நலன்களிலும், வளர்ச்சியிலும் IIT நிறுவனம் பெரிதும் உதவும் என்று மக்களிடம் உறுதி அளித்திருந்தது. IIT வளாகத்திற்கு பிரதான வாயில் தவிர 3 பகுதிகளில் 3 சிறிய gates உள்ளன. அதில் ஒன்று, வேளச்சேரி தொகுதியில் 179-வது ward, காந்தி சாலையில் அமைந்துள்ளது. 50 ஆண்டுகளுக்கு மேலாக அதை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த gate-ஐ திடீரென்று 24-12-2019 அன்று எடுத்துவிட்டு, சுவர் எழுப்பி

மூடிவிட்டார்கள். இதனால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்கள், உதவித் தொகை மற்றும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு 3 கி.மீ. சுற்றி உள்ளே வர வேண்டியுள்ளது. மேலும் IIT வளாகத்தின் உள்ளே Vanavani, KV–IIT என இரண்டு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இவை எல்லாவற்றையும்விட மக்களிடம் இப்பிரச்சினை sensitive feelings–ஐ உருவாக்கியுள்ளது. காரணம், அப்பகுதி முழுக்க வாழும் மக்கள் ஆதி திராவிடர்களாவார்கள். தங்களுக்கு மட்டுமே இந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது என அவர்கள் மனம் புண்படக்கூடிய வகையில், வேதனைமிக்க உணர்வாக இதனைக் கருதுகிறார்கள். எனவே, மீண்டும் காந்தி சாலையில் உள்ள gate–ஐத் திறந்து, மக்களின் சமூகம் சார்ந்த வேதனை தரும் தடுப்புச் சுவரை அகற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய துறைக்கு வருகின்ற கேள்வி அல்ல. இருந்தாலும்கூட, IIT என்ற முறையில், வேளச்சேரியில் இருக்கக்கூடிய மக்கள், அதுவும் ஆதி திராவிட மக்கள் வரும் வழியில் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது, அங்கே ஒரு வழி இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சரும், நானும் அவர்களோடு பேசி, மத்திய அரசிடமிருந்து அதை உடனடியாகத் திறப்பதற்கான உத்தரவை பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

பகுதிநேர நியாய விலைக் கடை

***52675—முனைவர் க. பொன்முடி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—